| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.18/2022 | வா. சா .1 | தேதி.21.02.2023 | |
| பெயர் | செல்வி. கிருத்திகா | வயது | 30 |
| த/பெ. | திரு.சதாசிவம் | முகவரி | 11/20, நாகம்மா கோவில் அருகில், மேட்டுப்பாளையம் -சக்தி மெயின்ரோடு, சிறுமுகை |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் இன்று நீதிமன்றத்திற்கு நடுரில் இருந்து கிளம்பி வந்ததேன் என்றால் சரிதான். என் பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாததால் அங்கிருந்து வந்தேன். நான் எந்த சமயத்திலும் சிறுமுகையில் குடியிருந்து வருவதை காண்பிக்க ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உண்மையில் வழக்கு சொத்தில் குடியிருந்து வரவில்லை என்றும், வழக்கிற்காக வேண்டி வழக்கு சொத்தில் குடியிருந்து வருவதாக முகவரியை காண்பித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1 ம் வாதி தொட்டம்மாளும்,2 ம் வாதி ரத்னாவும் நலமாக உள்ளார்களா என்றால் சரிதான். 2 ம் வாதி என் அம்மா , 1 ம் வாதி என் அத்தை. அவர்கள் இருவரும் சாட்சியமளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து தவிர்த்துகொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

2. வழக்கு சொத்து 1962 ல் வாங்கப்பட்டது. நஞ்சம்மாளும், அவரது கணவரும் அந்த சமயம் என்ன தொழில் செய்து வந்தார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாதென்றால் சரிதான். கோவிந்தப்ப கவுடருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் ரங்கம்மாள், 2 ம் மனைவி பெயர் நஞ்சம்மாள். கோவிந்த கவுடரின் அப்பா பெயர் எனக்கு ஞாபகமில்லை. நஞ்சம்மாளின் அப்பா, அம்மா பெயர் எனக்கு தெரியாது. நஞ்சம்மாளை கோவிந்த கவுடர் 2 வது திருமணம் செய்து கொண்டதால் நஞ்சுண்ட கவுடரின் சொத்திற்கான உரிமையை கோவிந்த கவுடர் விட்டுக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1947 ம் ஆண்டிலேயே நஞ்சுண்ட கவுடர் தனது முதல் மனைவியின் பிள்ளைகளுக்கு சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

3. கோவிந்த கவுடரின் தந்தையிடமிருந்து எவ்வித சொத்துக்களும் வரவில்லை என்றால் சரிதான். நஞ்சம்மாளும், தேப்பைய கவுடரும் சேர்ந்துதான் 1962 ல் வழக்கு

சொத்தை விலைக்கு பெற்றார்கள் என்றால் தேப்பைய கவுடரும், எனது தாத்தாவும் சேர்ந்து வியாபாரம் செய்ததில் வந்த பணத்தை கொண்டு என் தாத்தா என் பாட்டியின் பெயரில் சொத்தை வாங்கியுள்ளார். நான் சொல்வது போல் என் தாத்தா அவரது வருமானத்தை கொண்டு என் பாட்டியின் பெயரில் சொத்தை வாங்கவில்லை என்றால் சரியல்ல. தேப்பைய கவுடரும், கோவிந்த கவுடரும் சேர்ந்து வியாபாரம் செய்தார்கள் என்பதை காண்பிக்க எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் என்ன வியாபாரம் செய்தார்கள், அதன் மூலம் என்ன வருமானம் வந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. நஞ்சம்மாளின் பெற்றோர்களும், சகோதரர்களும் நஞ்சம்மாளுக்கு ஒரு ஆதாரம் செய்யவேண்டும் என்பதற்காக அவர் பெயரில் சொத்தை வாங்கி வைத்தார்கள் என்றால் அதற்கும் ஆதாரமில்லை. அதன் பின்னிட்டு 1997 ல் தேப்பைய கவுடரிடம் நஞ்சம்மாள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அப்போதிலிருந்து வழக்கு சொத்தானது நஞ்சம்மாளின் தனிப்பட்ட சொத்தாக உள்ளது என்றால் சரிதான். என் தந்தை ஆரம்பத்தில் சவுதியில் வேலை பார்த்து வந்தார். அதன் பிறகு சிறுமுகை அர்பன் வங்கியில் வேலை பார்த்து வந்தார். குடிப்பழக்கம் காரணமாக என் தந்தையும், தாயாரும் பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை 2019 ம் ஆண்டு கல்லீரல் பாதிப்பால் இறந்துபோனார். என் தந்தை இறப்பதற்கு முன்பாக VGM மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததற்காக Discharge Summary இதுதான். அது பி.சா.ஆ.1.

5. 15.11..1989 ல் என் அம்மா பெயருக்கு என் தாத்தா சொத்தை விலையாவணமாக எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த விலையாவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2. மேற்கண்ட விலையாவணத்திற்கு எவ்வித பணமும் கொடுககாமல் என் தாத்தா விலையாவணமாக என் அம்மா பெயருக்கு எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல. வேறொரு மூன்றாம் நபருக்கு விற்பதாக தாத்தா சொன்னதால் தானே பணத்தை கொடுத்து வாங்கிக்கொள்வதாக என் அம்மா சொன்னதால் என் தாத்தா பணத்தை பெற்றுக்கொண்டுதான் எழுதிக்கொடுத்தார். என் அம்மாவின் பெயருக்கு வந்த சொத்து கோவிந்தப்ப கவுடருக்கு எப்படி வந்தது என்றால் என் அப்பா சவுதியிலிருந்து சம்பாரித்து அனுப்பிய பணத்தை கொண்டும், எல்லோரும் சேர்ந்தும் என் தாத்தா கோவிந்தப்ப கவுடர் பெயரில் சொத்து வாங்கப்பட்டது. என் தாத்தா கோவிந்தப்ப கவுடரின் பெயரில் வாங்கப்பட்ட விலையாவணத்தின் சான்றிட்ட நகல் இதுதான். அது பி.சா.ஆ.3.

6. அப்போது 3 ம் பிரதிவாதி வெங்கடாசலம் விஸ்கோஸ் கம்பெனியில் வேலை

பார்த்து வந்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி வெங்கடாசலத்தின் வருமானத்தை கொண்டும், என் அப்பாவின் வருமானத்தை கொண்டும் கூட்டாக பி.சா.ஆ.3 சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். கூட்டாக வாங்கியதாக சொல்லியுள்ளார்கள். என் அப்பா குடிபோதைக்கு ஆளாகியிருந்ததால் என் அம்மாவிற்கு ஒரு ஆதரவு செய்து வைக்க வேண்டும் என்பதற்காக எவ்வித பணத்தையும் பெறாமல் என் அம்மாவின் பெயரில் பி.சா.ஆ.2 விலையாவணத்தை என் தாத்தா எழுதி வைத்தார் என்றால் சவுதியில் குடிக்கவே முடியாது , என் அம்மாவின் பெயரில் பணம் வாங்காமல் எழுதி வைக்க வேண்டிய தேவையேயில்லை. என் தந்தை சவுதியில் இருக்கும்போது இரண்டு வருட காலம் எங்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல.

7. எனது தந்தை குடித்துவிட்டு சவுதியில் வாகனம் ஓட்டி இருவரது மரணத்திற்கு காரணமாக இருந்ததால் இரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்தார்கள் என எங்களிடம் சொன்னார் என்றால் சரியல்ல. எனது அப்பா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது அனைத்து செலவுகளையும் என் பெரியப்பா 3ம் பிரதிவாதி வெங்கடாசலம்தான் செய்தார் என்றால் சரியல்ல, நாங்கள்தான் செய்தோம். தாவா சொத்தில் எந்த ஒரு சமயத்திலும் நானோ என் தந்தையோ என் குடும்பத்தாரோ குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. சவுதியில் இருந்து வந்தபிறகு என் தந்தையை கைவிட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. நஞ்சம்மாளுக்குரிய அனைத்து பராமரிப்புகளையும் 3ம் பிரதிவாதிதான் பார்த்துவந்தார் என்றும், சொத்தையும் அவர்தான் பராமரித்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அம்மாவிற்கு என் தாத்தா சொத்து கொடுத்துவிட்டதாலும், எனது பாட்டியை 3ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்பதாலும், 3ம் பிரதிவாதியின் பெயருக்கு என் பாட்டி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.6 இறப்புச் சான்றிதழில் வழக்கு சொத்தின் முகவரி உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தை தவிர வழக்கு சொத்தில் நாங்கள் குடியிருந்ததை காண்பிக்க எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . வழக்கு சொத்தை நாங்கள் பராமரித்து வந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் தந்தையும் ஒரு சாட்சி என்றால் சரியல்ல. என் அப்பாவின் பெயர் அதில் உள்ளது உண்மைதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தின் அசல் ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடைய அப்பாவுடையதல்ல. என் அப்பாவின் கையெழுத்து இதுதான் என காட்டுவதற்கு என்னிடம் என்ன ஆவணங்கள் உள்ளது என்றால் எதுவுமில்லை. மீண்டும் சாட்சி வீட்டில் தேடிப்பார்ப்பதாக உரைக்கிறார். ( வீட்டில் ஏதேனும் மேற்படியான

ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சாட்சிக்கு உத்தரவிட்டு, குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/-பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.